# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.47/2018

2021 ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் நாள் வா.சா.1ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. C. கலைவாணி, பி.ஏ., எல்.எல்.பி., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சித்ரா | ஜாதி | : |
| த/பெயர் | : | | மதம் | : |
| கிராமம் | : | | தொழில் | : |
| வட்டம் | : | | வயது | : |

வா.சா. 1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. நான் இன்று இந்த வழக்கு சம்பந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன், என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். 15.03.1988 தேதியிட்ட தமிழரசி பெயரில் உள்ள கிரய ஆவணம் எண்.409/1988 மன்னார்குடி சார்பதிவக சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1, 15.03.1988 தேதியிட்ட தமிழரசி பெயரில் உள்ள கிரய ஆவணம் எண்.1313/1988 மன்னார்குடி சார்பதிவக சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2, 09.01.2004 தேதியிட்ட தமிழரசி எனது கணவர் சத்தியசீலனுக்கு எழுதி வைத்த பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் அசல் வா.சா.ஆ.3, 28.02.2014 தேதியிட்ட கூத்தாநல்லூா ் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட தமிழரசி இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4, 11.03.2014 தேதியிட்ட எனது கணவர் சத்தியசீலன் எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் எண். 926/2014 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5, 19.03.2018 தேதியிட்ட எனது பெயரில் வழக்கு சொத்துக்கு செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதுகள் 2 எண்ணிக்கை வா.சா.ஆ.6, 22.03.2018 தேதியிட்ட எனது பெயரில் உள்ள மின் கட்டண ரசீது அசல் வா.சா.ஆ.7, 21.08.2017 தேதியிட்ட 1ம் எதிர்வாதி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் ஆவண எண்.3221/2017 மன்னார்குடி சார்பதிவக சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8, 30.01.2018 தேதியிட்ட 2ம் எதிர்வாதி தனலெட்சுமி வாக்காளர் அடையாள அட்டை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யபட்டது வா.சா.ஆ.9, 1ம் எதிர்வாதியின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம்

போலியானது என்று நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் அலுவலக நகல் வா.சா.ஆ.10, 07.04.2018 தேதியிட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் என்னால் கொடுக்கப்பட்ட புகாருக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்காக எனது வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பதிவு அஞ்சல் ரசீதுடன் வா.சா.ஆ.11, 18.05.2018 தேதியிட்ட மன்னார்குடி நத்தம் நிலவரித்திட்ட தனிவட்டாட்சியரால் வழக்கு சொத்துக்கு எனக்கு வழங்கப்பட்ட மனைவரி தோராயப்பட்டா வா.சா.ஆ.12, 28.06.2018 தேதியிட்ட வழக்கு சொத்துக்கு என் பெயரில் உள்ள மன்னார்குடி நகராட்சி நகரளவை பதிவேடு சான்று நகல் வா.சா.ஆ.13, 27.01.2020 தேதியிட்ட வழக்கு சொத்துக்கு என் பெயரில் செலுத்தப்பட்டுள்ள சொத்து வரி ரசீது அசல் வா.சா.ஆ.14, 11.05.2018 தேதியிட்ட தினமணி நாளிதழில் வழக்கு சொத்து தொடர்பாக 09.05.2018 தேதியிட்டு எனது வழக்கறிஞர் மூலமாக கொடுக்கப்பட்ட பொது அறிவிப்பு அசல் வா.சா.ஆ.15, 16.10.2018 தேதியிட்ட தினமலர் நாளிதழில் 2வது எதிர்வாதிக்கு வழக்கு விசாரணை குறித்து 12.10.2018 தேதியிட்டு கொடுக்கப்பட்ட வழக்கு அறிவிப்பு அசல் வா.சா.ஆ.16, 20.11.2018 தேதியிட்ட 1ம்வது எதிர்வாதி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யக்கேட்டு மன்னார்குடி சார் பதிவாளருக்கு வழக்கறிஞர் மூலமாக கொடுக்கப்பட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.17, 20.11.2018 தேதியில் மன்னார்குடி சார்பதிவாளருக்கு கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவீப்பிற்கு மன்னார்குடி சார் பதிவாளரால் 22.11.2018 தேதியில் கொடுக்கப்பட்ட பதில் கடிதம் வா.சா.ஆ.18, 27.11.2018 தேதியிட்ட வழக்கு சொத்திற்கான 01.01.1987 முதல் 26.11.2018 வரையுள்ள வில்லங்க சான்று நகல் வா.சா.ஆ.19, இறந்துபோன தமிழரசி பெயரில் ஏற்படுத்தப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை வலையதள பதிவிறக்கம் செய்யட்ட நகல் வா.சா.ஆ.20, 04.07.2019 தேதியிட்ட இறந்துபோன தமிழரசி பெயரில் வாக்காளர் பட்டியல் இல்லை என்று மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலகத்தின் பொது தகவல் அலுவலரால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுக்கபட்ட மேலெழுத்து கடிதம் உறையுடன் வா.சா.ஆ.21, 31.01.2019 தேதியிட்ட மன்னார்குடி சட்ட மன்ற தொகுதிக்கு உட்பட்ட மேலதிருப்பாலகுடி கிராமத்தின் வாக்காளர் பட்டியல் பாகம் எண்.141(வரிசை எண்.347) வலைதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.22, 2019ம் வருடத்திற்கான மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேலதிருப்பாலகுடி கிராமத்தின் கிராம ஊராட்சி வாக்காளர் பட்டியல் பாகம் எண்.4 (வரிசை எண்.279) வலைதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.23, 26.03.2019

தேதியிட்ட வழக்கு சொத்தைப் பொறுத்து பாராதீனம் ஏற்படுத்தக்கூடாது என்று மன்னார்குடி சார்பதிவாளர் மற்றும் வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருக்கு கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீது மற்றும் ஒப்புகை அட்டையுடன் 4 எண்ணிக்கை வா.சா.ஆ.24, 2017ம் வருடத்தில் 2ம் எதிர்வாதி தனலெட்சுமி அவரது கணவர் தமிழ்வாணன் பெயரில் உள்ள குடும்ப அட்டை வலைதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.25, 19.03.2021 இறந்து போன தமிழரசி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள வாக்காளர் அடையாள அட்டை வலைதள பதிவிறக்கம் செய்யபட்ட நகல் வா.சா.ஆ.26, 26.01.2021 தேதியிட்ட 2வது எதிர்வாதியால் என் பெயரில் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட ஆணையுறுதி ஆவணம் அஞ்சல் உறையுடன் வா.சா.ஆ.27, 05.09.2005 தேதியிட்ட 2வது எதிர்வாதி தனலெட்சுமி கணவர் தமிழ்வாணின் சகோதரர் செல்வராஜ் மகள் நித்யா என்பவரின் திருமண அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ.28, 21.09.2005 தேதியிட்ட 2ம் எதிர்வாதி தனலெட்சுமி கணவர் தமிழ்வாணன் தகப்பனார் இறந்து போனதற்கான உத்திரகிரிகை பத்திரிக்கை அசல் வா.சா.ஆ.29, 27.01.2014 தேதியிட்ட 2வது எதிர்வாதி தனலெட்சுமி - தமிழ்வாணன் ஆகியோரது மகன் சிவா என்பவரின் திருமண அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ.30, 30.01.2018 தேதியிட்ட 2வது எதிர்வாதி தனலெட்சுமியின் வாக்காளர் அடையாள அட்டை வலையதள பதிவிறக்க நகல் வா.சா.ஆ.31. ஆகியவற்றை எனது தரப்பு ஆவணங்களை ஏற்றுக்கொண்டு, வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை : இல்லை